1978 பிப்ரவரி 27]

(அ) மாயூரம் தாலூகா 55-ம் எண் பட்டமங்கலம் வட்டம், அக்களூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு 1973-ம் ஆண்டு அரிசன நல இலாகாவின் மூலம் 52 பேருக்கு குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அவை ஒப்படை செய்யப்பட்டனவா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) 50 அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக 1972-ம் ஆண்டு நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டது.

(ஆ) 1973-ம் ஆண்டு இவர்களுக்கு மனைப்பட்டா வழங்கப் பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, குறிப்பாக, மாயூரம் ஒன்றியப் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதில் நெருக்கடி காலத்திலிருந்து தாமதம் ஏற் பட்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடங்களுக்கான பட்டாக்கள் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்களா ? அதனைத் தவிர்த்து, பட்டா வழங்க இனியேனும் அரசு வழிவகை காண முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, மாயூரம் ஒன்றியம் முழுவதிலும் இப்படிப்பட்ட பிரச்னை இருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கேள்விக்குப் பிறகு, குறிப்பாக, அறிகிறேன், அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், இந்த அரசாங்கம், உடனடியாக நடவடிக்கை எடுத்து பட்டா வழங்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

செய்யாறு பாலத்தில் சுங்க வசூல்.

*296 வினா—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள செய்யாறு பாலம் கட்டி பத்து வருடங்களுக்கு மேலாகியும் சுங்க வரி வசூலிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இன்னமும் எத்தனை ஆண்டுகளுக்கு வசூல் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், திருவத்திபுரம் செய்யாற்றின் குறுக்கே ஆற்காடு திண்டிவனம் சாலை கி. மீ. 4½ல் 1961 62–ஆம் ஆண்டில் ரூ. 14,34,931 செலவில் பாலம் ஒன்று கட்டப்பட்டது. 1977 ஆகஸ்டு திங்கள் முடிய சுங்க வரி மூலம் வசூலான தொகை ரூ. 5,95,596·55 ஆகும். மீதியுள்ள தொகையை மேற்படி பாலம் கட்ட செலவான தொகை வட்டியுடன் திரும்பப் பெறும் வரை, சுங்கம் வசூலிக்கப்படும்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, வசூலிக்கப்பட வேண்டிய மீதித் தொகை இன்னும் எவ்வளவு காலத்திற்கு வாங் கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மீதம் உள்ள தொகை, இன்னும், சுமார் ரூ. 8½ இலட்சம். இன்னும் சுமார் 18 ஆண்டுக் காலத்திற்கு வசூலிக்கப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இந்தப் பாலத்திற்கு மட்டும் பிரத்தியேகமாக வசூலிக்கப்பட வேண்டிய காரணம் என்ன? குறிப்பாக, மற்ற பாலங்களுக்கு வசூலிக்கப் படாமல், இந்த ஜில்லாவில் உள்ள இந்தப் பாலத்திற்கு மட்டும் ஏன் வசூலிக்கிறீர்கள்? அதனுடைய அடிப்படைக் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 10 இலட்சத்திற்கு மேல் செலவிட்டுக் கட்டப் பட்டுள்ள மாநில அரசுப் பாலங்கள் அனைத்திலும் சுங்கம் வசூலிக்கப்படுகிறது.

* 297 வினு—

நீலகிரியில் பணிபுரியும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மலைவாசப்படி.

திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் நீலகிரி மலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மலைவாசப்படி, குளிர் தடுப்பு உடைக்கான படி கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?